International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 2 April - June 2026

Published on 14, April - June 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# சு. தமிழ்செல்வி நாவல்களில் விளிம்பு நிலைப் பெண்களின் சமூக வாழ்வியல் நிலை

**மை. ஜெயதெரசா**
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்), சுழல் எண் 242506A008

**முனைவர் மு. விஜயகுமார்**
உதவி பேராசிரியர் முதுகலை தமிழாய்வுத்துறை
சி முட்லூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சிதம்பரம்

**ஆய்வுச் சுருக்கம்**

சு.தமிழ்ச்செல்வி அவர்களின் நாவல்கள் பெரும்பாலும் கிராமப்புற வாழ்வியலையும் அங்குள்ள பெண்கள் எதிர்கொள்ளும் வாழ்வாதாரப் போராட்டங்களையும் மையமாகக் கொண்டவை. இவரது படைப்புகளில் பெண்களின் நிலை குறித்த ஆய்வுச் சுருக்கத்தை காணலாம்.

**முதன்மைச் சொற்கள்**

குடும்ப அமைப்பும், பெண்ணியம், மகளிர், தொழிலாளர்கள்

**முன்னுரை**

மனிதர்களின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் புதினங்கள், மக்கள் சார்ந்த சமுதாயத்தையும், சமூகம் சார்ந்த சிக்கல்களையும் பேசும் தன்மையன. குடும்பச் சிக்கல், சமூகக் கட்டுப்பாடு, பெண்களுக்குள்ள தளைகள், பருவக் கோளாறு, காதல், கலப்புத்திருமணம், விதவை மறுமணம், பொருளாதார ஏற்றத் தாழ்வுகள், சமூக அநீதிகள், சாதியச் சிக்கல், பாலியல் கொடுமைகள், சட்ட ஒழுங்கீனங்கள், ஒன்றுபடுதலும் போராட்டமும், கல்வி, வேலைவாய்ப்பு முதலிய சமூக வாழ்வியல் நிலைகளைக் கதைவழியாகவும், கதைமாந்தர் உரையாடல்களின் வழியாகவும் புதினங்கள் எடுத்துரைக்கின்றன. சு.தமிழ்ச்செல்வி படைத்துள்ள ஐந்து புதினங்களில் இடம் பெற்றுள்ள விளிம்புநிலைப் பெண்களின் சமூக வாழ்வியல் நிலைகளை அமைகின்றது.

**சமூகம் என்பதன் தோற்றம்**

'தனிமரம் தோப்பாகாது' என்பது போல, தனிமனிதன் 'சமூகம்" என்று கருதப்பட மாட்டான். மலைகளில் வாழ்ந்த ஆதிமனிதன் தொடக்கத்தில் தனித்தனியே வாழ்ந்து வந்தான். "மக்களினங்கள் எதுவுமே இநத் ஆதிமனித நிலையில் இருக்கவில்லை" என்று ஏங்கல்ஸ் கூறுகிறார். மக்களினங்கள் என்பது மக்கள் கூட்டமாக ஒன்று சேர்ந்து வாழும் சமூக முறையைக் குறிக்கும். இத்தகைய மனிதச்சமூகமே இல்லாத 'தனிமனித காலப்பகுதி' பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு நீடித்திருக்கக் கூடும். ஆதிமனிதன் தன் உணவுக்காகவும், தற்காப்புக்காகவும் விலங்குகளை வேட்டையாடத் தொடங்கினான். அப்போது அவனுக்குத் துணையாக இருந்தவை இயற்கை ஆயுதங்கள் மட்டுமே. "ஆதிகாலத்தில் கிராமங்க் ளோ, நகரங்களோ, விளை நிலங்களோ இல்லை. அவர்களுக்கு வீடு வாசல் இல்லை. உடுத்தத் துணி இல்லை. காய்நத் மரக்குச்சிகள், இறந்துபோன பெரிய மிருகங்களின் எலும்புகள், யானைத் தந்தங்கள், கல் போன்றவையே ஆதிமனிதனின் ஆயுதங்களாயிருந்தன" என்பர். மனிதன் வேட்டையாடுதலில் ஈடுபட்டு வந்த காலகட்டத்தில் அவனுக்கு மற்ற மனிதனின் துணை தேவையானது. அந்தத் 'துணை' என்ற பாதுகாவலே காலப்போக்கில் மனிதர்களை ஒரு கூட்டமாக ஒன்று சேர்ந்து வாழ்வதற்கானத் தேவையை ஏற்படுத்தியது. இப்படித்தான் மனிதச்சமுதாயம் உருவானது என்பர்.

தமிழ்ச்சமூகத்தின் தோற்றத்தினை ஆராய முற்பட்ட மா.செல்வராசன், “தமிழர்கள் ஒரு சமூகமாக எப்பொழுது உருவானார்கள் என்பது எளிதில் உரைக்க ஒண்ணாதது” என்று கூறுவர். மனிதச்சமூகம் பல படிநிலைகளில் வளர்ந்து வந்துள்ளது. “சமூகம், அநாகரிகச் சமூகம் (Savage Society) புராதனச் சமூகம் (Primitive Society) குழுச் சமூகம் (Tribal Society) மரபு வழிச்சமூகம், (Traditional Society) என்றெல்லாம் பகுத்துப் பேசப்படும்” என்பதால் இது பல நிலைகளில் தேங்கியும், வளர்ந்தும் வந்துள்ள உண்மை புலனாகிறது. தமிழரின் சமூகத்தைப் பண்பாடு செழித்த ஒரு மரபுவழிச் சமூகம் என்பர்.

**சமூகம் விளக்கம்**

ஒரே இடத்தில் கூட்டமாகச் சேர்ந்து வாழும் மக்கள் தொகுதியே சமூகம் அல்லது சமுதாயம் ஆகும். ‘சமூகம்’ என்பதை, “ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் நீண்ட காலமாக ஒன்று சேர்ந்து வாழ்வதற்காக மக்கள் கூட்டம் ஏற்படுத்திக் கொள்ளும் அமைப்பே சமூகம்” என்று தமிழ்க் கலைக்களஞ்சியம் விளக்குகின்றது. ‘சமுதாயம்’ என்பதனைத் ‘தமிழ் லெக்சிகன்’ எனப்படும் தமிழ்ப் பேரகராதி, “மக்கள் திரள்; Traditional Society” என்று பொருள் கூறுகிறது. எனவே சமூகம் என்பது ஒரு குழுவாகக் கூடிவாழும் மக்கள் கூட்டம் ஆகும்.

**“தமிழறிந்த தால் வேந்தன் எனை அழைத்தான் தமிழக்; கவியென் றெனையவளும் காதலித்தாள் அமுதென்று சொல்லுமிந்தத் தமிழ் என் ஆவி அழிவதற்கு காரணமாயிருந்த தென்று சமுதாயம் நினைத்திடுமோ? ..........”**

என்ற பாடலில் வரும் ‘சமுதாயம்’ என்பது சிந்திக்கும் உணர்வுடைய மக்கள் கூட்டத்தையே குறிக்கின்றது “மனிதனைச் சமூகவியல்புடைய விலங்கு என்பர். மனிதன் விலங்கிலிருந்து தோன்றினான் என்பர். மனிதனை ‘மா’; பிரித்துக்காட்டவே ‘சமூகவியல்புடைய’ விலங்கு என்னும் சொற்றொடர் வழங்குகின்றது” என்று அ.மு.பரமசிவானந்தம் கருத்துரைப்பது ஏற்புடையதாகும்.

**இலக்கியமும், சமுதாயமும்**

ஒரு நாட்டு மக்களின் வரலாறுதான் ‘சமுதாய வரலாறு’ என்று கருதப்படும். சமுதாய வரலாற்றினை அறிவதற்கு முதன்மை ஆதாரங் களாக அச்சமூகத்தில் தோன்றிய இலக்கியங் களும் அடங்கும். இங்கிலாந்து நாட்டின் சமுதாய வரலாற்றினை இலக்கியங்களின் வாயிலாக உருவாக்கிய ஜி.எம்.டி. ரெவிலியன், “சமுதாய வரலாறு என்பது அரசியல் நீங்கலாக மக்களின் வரலாறே”[12] என்று குறிப்பிடுவது இதற்குச் சான்றாகும்.

இலக்கியம் ஒரு சமுதாய நிறுவனம். இலக்கிய த்திற்கு அடிப்படையாக அமைந்திருக்கிற மொழியின் மரபும், இலக்கிய மாந்தர்களின் வாழ்க்கை மரபுகளும் சமுதாயம் உருவாக்கித் தந்தவையே.

“சமுதாயம் என்ற ஓர் அமைப்பினால் தான் இலக்கியத்திற்கு வேண்டிய மரபுகளும், தேவையான முன்மாதிரிகளும் அமைய இயலும்” என்னும் கருத்து சிந்திக்கத் தக்கது.

இலக்கியம் காலத்தைக் காட்டும் கண்ணாடி என்பர். ஒரு குறிப்பிட்ட காலத்தின் சமுதாயம் எவ்வாறு இருந்தது என்பதை அக்கால இலக்கியங்கள் காட்டிவிடும். “இலக்கியம் என்பது காலந்தோறும் மாறிவரும் மக்கள் உணர்ச்சிகளையும், பயன் மதிப்புகளையும் எடுத்துக்காட்டுவது” என்னும் தா.வே.வீராசாமி யின் கருத்து இதனை உணர்த்தும்.

சமுதாயம் என்பது நிலையானது அன்று. காலந்தோறும் மாறுவது. “காலத்துக்குக் காலம் சமுதாயத்திலே புதிய சமுதாயம் தோன்றும். அரசியல், பொருளியல், சமூக, கலாச்சார, ஆன்மீக இயக்கங்கள் இலக்கிய ஆதிக்கத்தைப் பாதிக்கின்றன” என்பர் க.கைலாசபதி. இதனால் காலமாற்றத்தால் மாறும் சமுதாயத்தை இலக்கியங்களும் உள்ளவாறே காட்டுகின்றன.

இலக்கியங்கள் காட்டும் சமூகச்சிந்தனைகள் சமூகம் நலம் பெற வேண்டி ஒவ்வொரு காலத்து இலக்கியங்களும் சிந்தனைகளை வெளிப்படுத்தி வந்துள்ளன. சங்க இலக்கியமான புறநானூறு,

**“யாதும் ஊரே யாவரும் கேளிர்”** என்று உணர்த்தியது, ஒரு பெருமை மிக்க சமூகச்சிந்தனையாகும். “வரலாற்றுப் போக்கில் சமுதாய மாற்றங்;கள் நிகழும் போது, சிந்தனை மாற்றங்க் ள் ஏற்படுகின்றன” என்பர். வரலாற்றிலும் சமூகம் பெரிது. “சுதந்திரக் கனல் வீசிய காலத்திலும் கூடச் சமூக உணர்வூட்டும் நாடகங்களை நடத்திய செய்தியை எம்.ஜி.இராமசச்ந்திரன் கூறுகிறார்.”

நாடகங்களைப் போலவே சிறுகதை, புதினம், புதுக்கவிதை போன்ற புத்திலக்கியங்களும் சமூகச்சிந்தனைகளை விதைப்பதில் முனைந்து நிற்கின்றன. “பழமை, புதுமை என்ற முரண்பாட்டில் முகிழத்து எழுந்த நாவல் இலக்கியம் நூற்றாண்டு வளர்ச்சியின் போது உள்ளடக்கத்தில் பல மாற்றங்க் ளையும் கண்டுள்ளது. மத்தியதர வர்க்கத்துப் பாத்திரங் களையே பெரும்பாலும் படைத்தளித்து வந்த நாவலாசிரியாக்ள் விவசாயிகளையும், வாழ்வு வேண்டித் துடிக்கும் வேறு பலரையும் பாத்திரங்களாக்க முற்பட்டுள்ளனர்” என்னும் க.கைலாசபதியின் கருத்து இதனை அரண் செய்யும்.

**சு.தமிழ்ச்செல்வி புதினங்களில் பெண்களின் சமூக வாழ்வியல் நிலைகள்**

சு.தமிழ்ச்செல்வியின் ஐந்து புதினங்களிலும் வசதி படைத்த மேட்டுக்குடி மக்களைக் காண முடியவில்லை. அனைத்துப் புதினங்களிலும் வருகிற முதன்மைக் கதைமாந்தர் சிறு விவசாயிகள், கூலி விவசாயிகள், ஆடு மாடு மேய்ப்போர், அளத்து வேலைக்குச் செல்வோர், மீன்பிடிப்போர் நகரங்களுக்குச் சென்று பனியன் கம்பெனியில் வேலை பார்ப்போர், அடிமட்டத் தில் வாழும் தாழ்த்தப்பட்ட மக்கள், வானத்தை யும், வறண்ட பூமியையும், நம்பி வாழும் கிராமத்து மக்கள் ஆகிய வறுமையில் வாழும் சமுதாயத்தினரையே பெரிதும் காண்கிறோம். இவர்கள் நாளும் சந்திக்கும் சிக்கல்களைக் காட்டுவதன் வழி, சமூகச் சிந்தனைகளை தமிழ்ச்செல்வி தம் புதினங்களில் விதைத்து உள்ளார். குறிப்பாக பெண்களின் சமூக அவல வாழ்வியல் நிலைகளைப் படம் பிடித்துக் காட்டுகிறார். அவற்றைப் பின்வருமாறு வகைப் படுத்தலாம்.

1. வறுமை நிலை
2. கல்வியும் பொருளாதாரமும்
3. குடும்பச் சிக்கல்கள்
4. பெண்களின் நிலை
5. பருவக் கோளாறு
6. காதல்
7. கலப்பு மணம்
8. விதவை மறுமணம்

**வறுமை நிலை**

சுதந்திர இந்தியாவில் எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்திருப்பது வறுமை. மனிதனின் வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படை வசதிகூட இல்லாமல் துன்புறும் நிலையே வறுமை. இவ்வுலகத்தில் இறைவன் நடத்தும் துன்பியல் நாடகமே வறுமை.

**'கொடிது கொடிது**
**வறுமை கொடிது**
**அதனினும் கொடிது**
**இளமையின் வறுமை'**

என்பது ஔவையின் வாக்காகும். வறுமையில் ஏழை மக்கள் வாடுகின்றனர். வயிற்றிற்காக எத்தொழிலையும் செய்யும் மக்களின் துன்ப நிலையை,

**"எங்கள் அவலநிலைக் கண்டு**
**எங்கள் கூரையே அழுகிறது**
**எங்கள் வாழ்வின் துயா ; கண்டு**
**எங்கள் வீடே கரைகிறது"**

இவ்வாறு கவிஞர் ரமணன் படம் பிடித்துக் காட்டுகிறார். மனிதனின் அடிப்படைத் தேவையாகக் கருதப்படுபவை உண்ண உணவு, உடை, இருப்பிடம் என்ற இம்மூன்றும் ஆகும். ஆனால் இவ்வடிப்படைத் தேவை கூட நிறைவேற்றப்படாத நிலையில் ஒருவன் வறுமையில் சிக்கித் தவிக்கிறான்.

**"எங்கள் அவலநிலைக் கண்டு**
**எங்கள் கூரையே அழுகிறது**
**எங்கள் வாழ்வின் துயர் கண்டு**
**எங்கள் வீடே கரைகிறது"**

இவ்வாறு கவிஞர் ரமணன் படம் பிடித்துக் காட்டுகிறார். மனிதனின் அடிப்படைத் தேவை யாகக் கருதப்படுபவை உண்ண உணவு, உடை, இருப்பிடம் என்ற இம்மூன்றும் ஆகும். ஆனால் இவ்வடிப்படைத் தேவை கூட நிறைவேற்றப்படாத நிலையில் ஒருவன் வறுமையில் சிக்கித் தவிக்கிறான். சு.தமிழ்ச் செல்வி நடுத்தரக் குடும்பச் சூழலில் பிறந்து வளர்ந்தவர். "எழுதுவதற்குச் சாதகமான காரணிகள் எதுவுமில்லாத குடும்பப் பின்னணியிலிருந்து வந்த எனக்கு வாசிப்பு வேட்கையின் மூலமே இலக்கிய ஈடுபாடு ஏற்பட்டது" என்பர். இவர் தம் முதல் படைப்பான 'மாணிக்கம'; புதினத்தில், 'நாளக்கி அரிசி வாங்கக் கொட யாங்கிட்ட காசில்ல. எவனுக்கிட்டயாவுது கடன் கேட்கலாமுன்னா அவனுவ முந்திக்கிட்டு நம்மள கேக்குறானுவ' என்று கூறும் மகன் நாஞ்சியிடம், 'இஞ்ச யாருகிட்டத் தாண்டா பணமிருக்கு. எல்லாம் நம்மளமேரி அன்னாடங்காச்சிங்கதான, நம்ம ஊருல வாத்தியாருவளத் தவர வேறயாருடா பணத்த மூட்டகட்டி வச்சிக்கிட்டு செலவு பண்ணுறானுவ?

கெவருமண்டு சம்பளம் வாங்குறத்தால வாத்தியாருங்க மட்டும் வசதியாயிருக்க முடியுது. தோப்பு தொரவு வச்சிருக்கிற கொஞ்ச நஞ்ச பேரு பாடு ஏதோ பரவால்லன்னு போவுது. ஊருல உள்ள மத்த முக்காவாசி ரோடப் பொழப்பும் நம்மளமேரித்தாண்டா நாறிக் கெடக்கு" என்று மாணிக்கம் கூறுவதன் வாயிலாக, கிராமத்து மக்களின் வறுமைச் சூழலை வர்ணிக்கிறார். சு.தமிழ்ச்செல்வி. சமூகத்தின் அடிமட்டத்தில் வாழும் சாதிய மக்களையே சு.தமிழ்ச்செல்வி தம் கதை மாந்தர்களாகப் படைத்துள்ளார். "வறியவாக் ளெலல்hம் கீழ்ச்சாதிக்காரர் இல்லை. ஆனால் கீழ்ச்சாதிக்காரர் எனப்படுபவருள் பெரும் பான்மை வறுமை எல்லைக்குள் உழல்பவரே" என்பர் ஆய்வாளர்.

இல்லாமை என்பது சமூகத்தின் மிகப்பெரிய கொடுமையாகும். "கொடியது கேட்கின் நெடிய வெவ்வேலோய் கொடிது கொடிது வறுமை

கொடிது" என்றார் ஔவையார். வறுமை இறைவனால் விதிக்கப்பட்ட விதி என்று எழுத்தாளருள் சிலரும் கருதுவர். "இந்த உலகத்தில் இறைவன் நடத்தும் துன்பியல் நாடகம் வறுமை, அதாவது இல்லாமை என்பது ஜெகசிற்பியனின் கருத்து என்பர்" வறுமைக்குக் காரணம் இறைவன் விதித்த விதியா? இக்கேள்விக்குத் திரைப்படக் கவிஞர் உடுமலை நாராயணகவி, கள்ளத் தனத்தாலே செல்வம் குவிக்கும் கயவர்களின் வினையே காரணம் என்பார்.

**"தாழ்ந்தோர் உயர்ந்தோராக**
**மக்கள் வாழுகின்றாரே**
**சிலர் தனவந்தர் பலர் தரித்திரராய்க்**
**காணுகின்றாரே**
**இது யார் செயல்? விதியா? வினையா?**
**அறிந்து சொல்வீரே...........!"**

வறுமை என்பது கடவுள் விதித்த விதியாகாது. பொருளாதார ஏற்றத்தாழ்வும், வேலையில்லாத் திண்டாட்டமும், உழைப்பிற்கேற்ற ஊதியம் இல்லாமையும், மக்கள்தொகைப் பெருக்கமும் வறுமைக்குக் காரணங்களாக அமைகின்றன. "மக்கள் தொகைப் பெருக்கம், தனிமனிதன் சொத்துடைமை, வேலையிழப்பு, தொழிலாளர் கள் முதலாளிகளால் சுரண்டப்படும் நிலை, சோம்பல் காரணமாகப் பொருளீட்டாத நிலை, பஞ்சம் எனப்பல காரணங்களால் வறுமை ஏற்படுகிறது" எனவும், "வறுமைக்கு முக்கியக் காரணிகள் இரண்டு,

1. சுற்றுப்புறச் சூழலால் ஏற்படும் தனிநபர்களின் இயலாமை

2. காலநிலை, தட்ப வெப்பம் காரணமாகவும், இயற்கைச் சீற்றங்கள் காரணமாகவும் ஏற்படும் இடர்ப்பாடுகளால் பாதிக்கும் பொருளாதார நிலை" எனவும் வறுமைக்கான காரணங்களைச் சமூகவியலார் கூறுவர்.

சமூகவியல் மற்றும் மானிடவியல் கலைச் சொல் அகராதி, 'வறுமை' என்பதற்கு "ஒரு தாழ்வான வாழ்க்கைத் தரம்" என்று விளக்கம் கூறுகிறது.

"சமுதாயத்திலுள்ள ஒவ்வொரு பிரிவினர்க்குரிய பொருள் கிடைக்கப்பெறாத நிலையே வறுமை எனப்படும்" என்பர்.

'அளம்' புதினத்தில் மழை வெள்ளத்தால், பயிர்கள் எல்லாம் மூழ்கி, மேற்கொண்டு உழவு நடைபெறாமல் தானியப் பஞ்சமும் தலைவிரித்தாடும் வறுமைச் சித்திரம் பல இடங்களில் காட்டப்பட்டுள்ளது.

தன் அம்மாவிடம் விதை நெல் வாங்கச் சொன்ன வடிவாம்பாளிடம் அவள் அம்மா சுந்தராம்பாள் கூறும் போது, "ஓம் பேச்சக் கேட்டு நெல்லு வெரச்சி நா கடம்பட்டு பாழாப் போனது பத்தாதா? நெல்லு வெரச்சி வெள்ளத்தோடவுட்டுப்புட்டு கொரவம்பில்ல தின்னுக்கிட்டுருக்குறமே. இது பத்தாதா நம்மளுக்கு.

இன்னமும் வேற அநத் கொல்லயிலக் கொட்டி அழிக்கச் சொல்லுறியா? ஒண்ணும் தெளிக்காண்டாம். இப்ப தெளிச்சி எதுக்கும் புண்ணியப்படாது. தரிசாவே கெடக்கட்டும். ஊருசனம் ஆடு மாடுவொளயாவுது கட்டி மேய்க்கட்டும் என்றாள் சுந்தரம்பாள்"

கொல்லையில் விளைந்த குரவம் புல்லை உணவாக்கி உண்ணும் நிலை, ஒரு விவசாயக் குடும்பத்திற்கு உச்சக்கட்ட வறுமையாகும். 'அளம்' புதினத்தில் கோவில் தாழ்வை விட்டுவிட்டு சுப்பையன், ராமையாப் பிள்ளையு டன் சிங்கப்பூர் சென்று வேலை செய்யலாம் என்று கிளம்பினான். ஆனால் ராமையாப் பிள்ளை வீட்டு வேலைக்கு சேர்த்துவிட்ட வீட்டிலிருந்து சுப்பையன் யாரிடமும் சொல்லாமல் கொள்ளாமல் எங்கோ ஓடி விட்டான். 'ஐந்து வருடத்தில் வந்து விடுவேன் என்று சொன்ன சுப்பையன் வருடம் எட்டாகியும் இன்னும் வரவில்லையே' என்று சதா அவனையே நினைத்துக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தாள் சுந்தராம்பாள் என்பதை சு.த.செ,

**'சிட்டுக்குருவியளா................செமலோரத்து**
**பச்சியளா..................................**
**சீமக்கி போனியளா சிவந்தகனி தின்னியளா?**
**செடியறக்கம் கொணடி; யளா.....? யாஞ் சீமான**
**பாத்தியளா..................?**
**பச்சக்குருவியளா பட்டணம் தான் போனியளா**
**பழுத்த பழம் தின்னியளா...........? பசிஎறக்கம்**
**கொணடி; யளா...............?**
**யாம் பழிகாரப் பாவிய பாத்தியளா...?**

கண்ணீரையும் மூக்கிலிருந்து வடிந்த தண்ணீரையும் முந்தானையால் துடைத்துக் கொண்டாள் சுந்தராம்பாள்" என்றும், உண்ண உணவின்றி திண்டாடிய சுந்தராம்பாளும் அவளது மகள்களும் மின்னிக்கிழங்குகளையும் காரக்கொட்டிக் கிழங்குகளையும் சுட்டும் அவித்தும் தின்றார்கள் என்பதை, "சின்னமகள் கொண்டு வந்து கொடுத்த காரக்கொட்டிக் கிழங்கை வெட்டி அலசினாள். உரலில் போட்டு இடித்தாள். வெள்ளையாய் மாவுபோல் வந்தது கிழங்கு. சொத சொதவென்றிருந்த மாவை உரலிலிருந்து அள்ளினாள். கையெல்லாம் ஒரே அரிப்பெடுத்தது. அரிப்பு தாங்க முடியவில்லை. உடலில் மாவுபட்ட இடமெல்லாம் அரித்துத்தின்றது. நிறைய புளியைக் கரைத்து ஊற்றி களியாகக் கிண்டினாள். புளியால் காரல்

குறைந்தது. பிள்ளைகளுக்கும் கொடுத்துவிட்டு தானும் தின்றாள். அன்றிலிருந்து காரக்கொட்டிக் கிழங்கைத் தேடியும் ஊரை ஒரு முறை சுற்றிவந்தார்கள் அஞ்சம்மாளும் ராசாம்பாளும். தாழங்காடுகளில் மின்னிக்கொடியும் படர்ந்து; கிடந்தது. மின்னிக் கொடியின் வேரில் கிழங்கிருப்பதைப் பார்த்துவிட்டு பிடுங்கினாள் அஞ்சம்மாள். கட்டை விரலளவு கிழங்குகள் வேரிலிருந்தன. வாயில் வைத்து லேசாய் கடித்துப் பார்த்தாள். காரலடித்தது, திங்கலா மென்று மடிநிறைய மின்னிக் கிழங்குகளை பிடுங்கிக் கொண்டு வந்தாள். மின்னிக் கிழங்குகளை சுட்டும், அவித்தும் தின்றார்கள். ஒவ்வொரு நாளையும் இப்படி காடுகரையில் கிடப்பதைத் தின்றே ஓட்டினார்கள்.

தினமும் அக்கம் பக்கத்து சனங்களுக்குத் தெரியாமல் காட்டில் கிடக்கும் காரக்கொட்டிக் கிழங்கையும், மின்னிக் கிழங்கையும் பிள்ளை களுக்குக் கொடுத்துவிட்டு வெகுநேரம் வரை தனியாய் உட்கார்ந்து அழுது கொண்டி ருப்பாள் சுந்தராம்பாள். அவள் வேண்டாத தெய்வமில்லை. எந்தத் தெய்வம் அவள் கணவனை அவளிடம் கொணடு; வந்து சேர்க்கப் போகிறது? இநத் மூன்று புள்ளை வொளயும் வச்சிக்கிட்டு அரவயத்துக்

கஞ்சிக்கி அல்லாடுறனே, கடவுளே.... ஒனக்கு கண்ணேயில்லயா? ஓங்கண்ணு அவிஞ்சி பெயிட்டா? யாம்புள்ளைவொள நான் எப்படி கரசேக்கப் போறனோத் தெரியலையே. போன ஆமபு;ள என்ன ஆனாவோன்னு ஒண்ணுந் தெரியாம தெவச்சி நிக்கிறனே. பன்னண்டு வருசமா பரிதவிச்சி நிக்கறனே. என்ன கண்கொண்டு பாக்க இநத் வூருல

ஒரு தெய்வமும் கெடயாதா. நொண்டிவீரன் ஆவுத்திகாத்தானெல்லாஞ் செத்துப் பெயிட்டியளா? என்று எதை எதையெல்லாமோ நினைத்து கலங்குவாள்” (அளம். பக்கம்-114–115) என்றும் வருணிப்பது வறுமை காரணமாக பொருள் தேட வெளிநாடு சென்ற கணவன் இறுதிவரை திரும்பாத நிலையில் தனது மூன்று பெண் குழந்தைகளுடன் வாழ்வை எதிர்கொள்ளும் சுந்தராம்பாள் எனும் எளியதாயின் போர்க்குணத்தைக் காவியத் தன்மையுடன் விவரிக்கிறார்.

**கல்வியும் பொருளாதாரமும்**

பெண்களுக்குக் கல்விக் கூடாது என்ற மறுப்பு இலக்கியங்களில் இல்லை. கணிதமும் எழுத்துக் களும் கண்களுக்கு ஒப்பாக இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளன. “எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு” என்று திருவள்ளுவர் கல்விக்கு விளக்கம் தருகிறார். கல்வி ஆண், பெண் இருபாலர்க்கும் சமம் என்பதை,

**“கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு**
**புண்ணு டையவர் கல்லாதவர் ”**

என்று குறள் விளக்குகிறது.

**பெண்களின் அடிமைநிலைக்கு முதன்மை காரணமாக இருப்பது கல்வியின்மையே.**

‘மாணிக்கம்’ புதினத்தில், மாணிக்கம் தனக்கென்று இருந்த ஒரே சொத்தான தென்னந்தோப்பை விற்று தன் ஆண் மகனாகிய நாஞ்சியைப் படிக்க வைத்தான். அதே நேரத்தில் தன் குடும்ப வருமானத்திற் காக, படித்துக் கொண்டிருக்கும் பெண்பிள்ளை யான மணியின் படிப்பை பாதியிலேயே நிறுத்திவிட்டு கடையில் உட்கார வைத்து விட்டான் என்பதை, “இடும்பாவனத்தில் ஏழாவது படித்துக் கொணடி; ருந்தாள் மணி. கொல்லையில் கடலைபோடும் வேலை நடந்து கொண்டிருந்தது. ஆட்கள் வெற்றிலை பாக்கு கேட்டார்கள். ‘வாங்கியாறன்’ என்று சைக்கிளை எடுத்துக்கொண்டு சுப்பு மகன் கடைக்குப் போனான் மாணிக்கம். குடை பூட்டியிருந்தது. கீழக்காட்டு சின்னத்தம்பி கடைக்குப் போனான். அதுவும் சாத்திக் கிடந்தது. வடக்கு ரோட்டிலுள்ள குப்புசாமி, சாம்பசிவம் கடைகளைப் போய்ப் பார்த்தான். சொல்லி வைத்ததுபோல் எல்லாக் கடைகளும் மூடியே கிடந்தன. கோயிலடிக்குப் போய்..... செட்டியார் கடையில் வாங்கிவந்தான். அவசரத்திற்கு வெற்றிலைப் பாக்கு வாங்க முடியாமல் போனதால் தானே ஒரு கடை வைக்க வேண்டுமென்று நினைத்தான். மதகடியை அடுத்திருந்த மனையில் ஒரு கொட்டகை போட்டு நூறு ரூபாய்க்கு வெற்றிலை, பாக்கு, தீப்பெட்டி, சுருட்டு, படி என்று சில்லரைப் பொருட்களை வாங்கிவந்து வைத்தான். பள்ளிக்கூடம் போயக் கொண்டிருந்த மணியின் படிப்பை பாதியிலேயே நிறுத்திவிட்டு கடையில் உட்கார வைத்து விட்டான்” (மாணிக்.பக்.265-266) என்று ஆசிரியர் கூறுவதன் மூலம் பெண்கல்வி இன்றளவும் முக்கியத்துவம் பெறாமல் இருக்கும் நிலையை உணர முடிகிறது.

‘கற்றாழை’ புதினத்தில், சண்முகம் நன்றாகப் படித்துக் கொண்டிருக்கும் தன் மகள் மணிமேகலையின் படிப்பை, சாராயக்கடையில் குடித்துவிட்டுப் பேசும் ரெத்தினசாமியின் பேச்சைக் கேட்டுப் பாதியிலேயே நிறுத்திவிட்டு சைக்கிள் கடை வைத்துக் கொடுத்தான், என்பதை பின் வரும் உரையாடல் பகுதி வாயிலாக ஆசிரியர் எடுத்துரைக்கிறார்.

**‘யாஞ்சண்முவம் ஓம் மவள படிக்கவக்கவா**
**போற? என்றான்**
**ரெத்தினசாமி’.**

'ஆமாண்ண'

'படிக்க வச்சி கலக்கிட்டுரு உத்தியோகம் பாக்கச் சொல்லப் போறியா'

'அது எப்புடின்னா எனக்குத் தெரியும்? வாத்தியாரெல்லாம் நல்லா படிக்கிது இடுமா னத்துல சேத்துவுடுப்பான்னு சொன்னாவோ. இதுவும் அளுதிச்சி. சேத்துவுட்டன். என்ன படிச்சி எப்படியாவுமுன்னு எனக்கு எப்புடித் தெரியும்?'

'தெரியலயில்ல. பெறவு எதுக்காவ படிக்கவக்கிற? சண்முவம், ஓம் மவள பள்ளிக்கொடம் போச் சொல்லுறதவிட ஒரு சைக்கிள்பம்பு வாங்கிக்குடுத்து ரோட்டு ஓரமா ஒக்கார வச்சியன்னா தெனமும் ஓங்குடிக்கு மொடயில்லாம காசி கெடக்கிமுல்ல'.

'என்னண்ண இப்புடிச் சொல்லுறிய?'

'நான் சும்மா வெவண்டைக்குச் சொல்றன்னு நெனக்காத.

நெசமாத்தான் சொல்லுறன். ஒரு நாளைக்கி நூத்துக்கும் கொரச்சயில்லாம இந்த ரோட்டுல சைக்கிள் போவுது. பத்துல ஒருத்தங்கொடவா காத்தடிக்க மாட்டான். தொண்டயக் காட்டாய்ங்க அத்துன பேரும் ஒவ்வூட்டத் தாண்டித்தான் போவணும் வரணும். வழியில எங்கயாவது சைக்கிள் கட இருக்கா? யோசிச்சுப் பாரு. ஒம்பொண்ண படிக்கவச்சி அது சம்பாரிக்கிற காலத்துல நீ எப்புடி இருப்பியோ யாருக்குத் தெரியும். செத்தவஞ் சூத்துல வைக்கல வச்சித் திணிக்கிற கதயா இப்ப இல்லாத காசிபணம் அப்ப ஒனக்கு என்னத்துக்கு ஆவப்போவுது? என்ன சண்முவம் பேசாம இருக்குற?'

'ஒண்ணு மில்லண்ண!'

'தாம் புத்திக்காச் சரியா செய்யணும். இல்லாட்டி சொல்

புத்தியாவுது கேட்கணும். ரெண்டும் இல்லாம யாண்டா நீ சும்மா கெடந்து

தட்டுக் கெடுற?'

'நீங்க சொன்னத்த தாண்ண நானும் யோசிச்சிக்கிட்டு இருக்குறன்'. ரெத்தினசாமி சொன்ன யோசனை கொஞ்சம் கொஞ்சமாக சண்முகத்தின் மனதை மாற்றியது. போதை அதிகமாக அதிகமாக ரெத்தினசாமி தனக்கொரு நல்லவழியை காட்டிவிட்டதைப் போல நினைத்தான். என்று சு.தமிழ்செல்வி நாவல்களில் பெண்ணியச் சிந்தனையும் பாத்திரப் படைப்பும் அமைந்துள்ளது.

**முடிவுரை**

ஒரு குறிப்பிட்ட காலத்தின் சமுதாயம் எவ்வாறு இருந்தது என்பதை அக்கால இலக்கியங்கள் காட்டிவிடும். கொல்லையில் விளைந்த குரவம்புல்லை உணவுக்குப் பயன்படுத்துவது, அன்றன்றைய கூலியை வாங்கியே ஒவ்வொரு நாளும் வாழ்வது என்னும் உழைப்போரின் வறுமையை சு.தமிழ்ச்செல்வி புதினங்களில் காணமுடிகிறது.

சு.தமிழ்ச்செல்வி புதினங்கள் பெண் கல்வி இன்றளவும் முக்கியத்துவம் பெறாமல் இருக்கும் நிலையை உணர்த்துவதோடு, பெண் கல்வியின் அவசியத்தையும் உணர்த்துவதைக் காணமுடிகிறது. பொருளாதார ஏற்றத்தாழ்வுக் கும், மனித வாழ்வின் அவலத்திற்கும் இன்றையச் சமூக அமைப்பே முழு முதற்காரணமாக அமைகின்றது என்கிறார் ஆசிரியர். சு.தமிழ்ச்செல்வி புதினங்களில் காட்டப்படும் குடும்பச் சிக்கல்கள் யாவும் இயற்கைச் சீற்றம், பொருளாதாரம் இவற்றை அடிப்படையாகக் கொண்டவை. மிக எதார்த்தமாக உலகியல் குடும்பங்களில் காணக்கூடிய சிக்கல்களாகவே அவை உள்ளன. தாய்வழிச் சமூகம் என்று பெண்மை பெருமையாய் வாழ்ந்த நிலையிலிருந்து மாறி, தந்தை வழிச் சமூகம் தோன்றிய காலந் தொட்டே பெண் அடிமைப்படுத்தப்படுகிறாள் என்பதை சு. தமிழ்ச்செல்வி புதினங்களில் காணமுடிகிறது.

**அடிக்குறிப்புகள்**

1. எங்கல்ஸ், 'குடும்பம் தனிச் சொத்து, அரசு' ஆகியவற்றின தோற்றம், ப.37
2. எஸ்.ஏ. பெருமாள், மனிதகுல வரலாறு, ப.116
3. நா. வானமாமலை, மார்க்ஸ்ய சமூகவியல் கொள்கை, (வரலாற்றுப் பொருள் முதல் வாதம்), ப.18
4. மா. செல்வராசன், சங்ககாலச் சமூகவியல் கோட்பாடு, ப.172.
5. அ. சண்முகதாஸ் (பதி. ஆ), ஆக்க இலக்கியமும் அறிவியலும், ப.3
6. கலைக் களஞ்சியம், தொகுதி-4, ப.477
7. பாஸ்கல் கில்பர்ட், ஜெ. நாராயணன் (மொ.பெ.ஆ), சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள், ப.12.
8. சு. தமிழ்ச்செல்வி, ஆறுகாட்டுத்துறை, ப.5.
9. சு. தமிழ்ச்செல்வி, மாணிக்கம், ப.3.

**துணை நின்ற நூல்கள்**


* அளம் சு. தமிழ்ச்செல்வி நாவல் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் சென்னை
* கீதாரி நாவல் தூ தமிழ்ச்செல்வி நாவல்
* சு. தமிழ்ச்செல்வி, ஆறுகாட்டுத்துறை
* சு. தமிழ்ச்செல்வி, மாணிக்கம்